அழகிய உருவம்! அமைதியின் வடிவம்!



கல்லுமே கரையு மே!உன்
கலைமுகம் கண்டால்! அச்சு
வெல்லமே உன்ப டைப்பு!
வெல்லுமே பகையை! வெள்ளை
முல்லையின் உள்ள மே!நம்
முத்தமிழ் அறிஞருக்குச்
செல்லமே! செல்வ மே! நீ
சென்றதேன் எம்மை விட்டே?

உரைநடை எழுத்துச் செல்வம்!
உயர்தரக் கருத்துச் செல்வம்!
தருவாகிப் பயன்வி ளைக்கும்
தமிழ்ச்செல்வம்! தாய்வ யிற்றில்
கருவான அறிவுச் செல்வம்!
கழகத்தின் கொள்கைச் செல்வம்!
திருவாரூர் கொடைய ளித்தத்
திராவிடச் செல்வம் நீதான்!

சத்தியம் உனது செல்வம்!
சமத்துவம் உனது செல்வம்!
முத்தமிழ் உனது செல்வம்!
“முரசொலி” உனது செல்வம்!
பத்தரை மாற்றுப் பொன்போல்
பண்பில்நீ உயர்ந்த செல்வம்!
சித்தத்தில் கலந்த எங்கள்
செல்வத்துட் செல்வம் நீதான்!

கல்வியிற் சிறந்த செல்வம்!
கட்டுரை வரைந்த செல்வம்!
சொல்வளம் மிகுந்த செல்வம்!
சுயமரி யாதைச் செல்வம்!
நெல்வயல் போலும் ஆற்றல்
நிறைந்தநற் செல்வம்! எங்கள்
“செல்வியின் செல்வ மான
செல்வமே” சென்ற தெங்கே?

முழுநிலா வெளிச்சக் கண்கள்
மூடிற்றோ! அந்தோ! அன்பைப்
பொழிகின்ற பார்வை எங்கே?
பூஞ்சிரிப் பெங்கே? மின்னும்
அழகிய உருவம் எங்கே?
அமைதியின் வடிவம் எங்கே?
மொழியுணர் வூட்டி வைத்த
“முரசொலிப் புதையல்” எங்கே?


தூண்டினார்! குற்றச் சாட்டு
சுமத்தினார்! சட்ட மன்றக்
கூண்டிலே ஏற்றி னார்! நீ
குறுநகை புரிந்து நின்றாய்!
தாண்டினாய் தடையை! அன்புத்
தலைவரை நெகிழ வைத்தாய்!
மூண்டதோர் எதிர்ப்பை யெல்லாம்
“ முரசொலி”க் காக ஏற்றாய்!

நேர்எதிர் குணமாய், நீரும்
நெருப்புமாய் உடன்பி றந்தீர்!
நீரோடை தம்பி! கோப
நெருப்பன்றோ அண்ணன் மாறன்!
கூர்தீட்டும் அண்ணன் கோபம்!
குளிர்விக்கும் உன்றன் ஈரம்!
தூரம்நீ சென்றாய்! நெஞ்சில்
சுமைதாங்கி டாத பாரம்!

“கலைஞரின்” மறைவுக் குப்பின்
கண்ணீரைப் பொழிந்த வண்ணம்
தலையிலே அடித்துக் கொண்டு
“தளபதி” அழுத காட்சி
மலைகூட உருகும்! எங்கள்
மனம்என்ன ஆகும்? சோக
வலையிலே எம்மை வீழ்த்தி
வழியில்ஏன் பிரிந்தாய் ஐயா!

துளைத்ததே கொடிய செய்தி!
துடித்ததே இதயம்! எம்மை
வளைத்ததே துன்பம்! பொங்கி
வழியும்கண் ணீர்து டைத்தே
களத்தில்நீ விட்டுச் சென்ற
கடமையைத் தொடர்வோம்! எங்கள்
உளத்தில்நீ என்றும் வாழ்வாய்
உயிர்ப்பூவாய்!வணங்குகின்றோம்
இலைமீது துளிகள் அல்ல!
ஏட்டில்நீ வடித்த சொற்கள்
மலைமீது கல்வெட் டைப்போல்
நிலையான வரலா றாகும்!
கலைமிளிர் எழில்மு கத்தைக்
கவின்மிகு புன்சி ரிப்பைச்
சிலையிலே ஒளிரக் கண்டு
தேற்றிக்கொள் வோம்! மனத்தை!

கவிச்சுடர்
கவிதைப் பித்தன்



சைதாப்பேட்டை சிறையில் கைதிகள் மோதல்

சென்னை, அக். 12 –

சென்னை புழல் மத்திய சிறையில் இடப்பற்றாக்குறை காரணமாக, அங்கு அடைக்கப்பட்டிருந்த 23 கைதிகள் கடந்த வாரம் சைதாப் பேட்டை கிளை சிறைக்கு மாற்றப் பட்டனர். அங்கு போதிய இடவசதி இல்லை எனக் கூறிய அவர்கள், தங்களை மீண்டும் புழல் மத்திய சிறைக்கு மாற்ற வேண்டும் என்று சிறை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இதுதொடர்பாக சிறை நிர் வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிகிறது.

இதனால் ஆத்திரமடைந்த புழல் சிறையிலிருந்து மாற்றப்பட்ட கைதிகள், நேற்று முன்தினம் காலை சைதாப்பேட்டை கிளை சிறையின் சமையல் அறையில் உணவு தயா ரித்துக் கொண்டிருந்த 4 கைதி களைத் தாக்கியதாகக் கூறப்படு கிறது. இதனால் இருதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது ஒருவரையொருவர் சரமாரியாகத் தாக்கிக் கொண்டதில் 4 கைதிகள் காயமடைந்தனர். இதைக் கண்ட சிறைக் காவலர்கள் விரைந்து சென்று இரு தரப்பின ரையும் சமாதானப்படுத்தினர். மேலும், காயமடைந்த 4 கைதிகளை யும் மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இரா.கிரிராஜன் எம்.பி.– அழகிரி சதாசிவம் முன்னிலை!

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் 14.10.2026 புதன்கிழமை மதியம் 3.00 மணியளவில், சங்ககிரி பவானி மெயின் ரோட்டில் உள்ள, ஸ்ரீ வாசுதேவ் மஹால் திருமண மண்டபத்தில்", மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலை மையில், தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இரா.கிரிராஜன், எம்.பி.- அழகிரி சதாசிவம் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடா ளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட் டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி புதிய நகர, ஒன் றிய, பேரூர், வார்டு, கிளை கழக மறுசீரமைப்பு குறித்து.

கழக ஆக்கப்பணிகள் குறித்து.

டி.எம்.செல்வகணபதி
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.செயலாளர்.

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, அக். 12 -

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் இன்று (12ஆம் தேதி திங்கள் கிழமை) திருமங்கலம் கொடி திருமண மஹாலில் நடைபெற உள்ளதாகவும் இதில் திமுக நிர்வாகிகள் தவறாமல் பங்கேற்று சிறப் பிக்க வேண்டுமென மாவட் டச் செயலாளர் சேட பட்டி மு.மணிமாறன் எம். எல்.ஏ. தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.



அதன் விபரம் வரு மாறு:-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க புதிதாக கழக மாவட்டங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன,

மேலும் கழகத் தலைவ ரின் ஆலோசனையின் படி அமைக்கப்பட்டுள்ள கழக மறு சீரமைப்புக்குழு மூலம் ஒன்றிய, நகர, பகுதிக்கழக, வட்டக் கழக, பேரூர் கழ கங்கள் வாக்காளர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப புதி தாக உருவாக்கப்பட உள் ளது இது தொடர்பான மதுரை தெற்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட் டம் இன்று (12.10.2026 திங்கள் கிழமை) காலை 10.00 மணி அளவில் திரு மங்கலம் கொடி திருமண மண்டபத்தில் எனது தலை மையிலும், தலைமை கழக பிரதிநிதிகள் பி.டி.சி செல் வராஜ், மூத்த வழக்கறிஞர் ரவீந்திரன் ஆகியோர் முன் னிலையில் நடைபெற உள் ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற் குழு,

பொதுக்குழு உறுப்பி னர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர் வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அ மை ப் பா ள ர் க ள் , மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கிளைக்கழக செயலாளர் கள் உள்ளிட்ட அனைவ ரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

சர்வதேச மீடியாக்களில் தலைப்புச் செய்தியான கி.ஜே.பி. போராட்டம்!

நியூயார்க், அக். 12 - “ஒரு மனிதனை உங்களால் தடுத்து சிறையில் அடைக்க முடியும்.. ஆனால், உண் மையை ஒருபோதும் சிறை பிடிக்க முடியாது.” டெல் லியில் அமைதியாகப் போராட நினைத்த இளை ஞர்கள் மீது அரசு ஏவிய அதிகார அடக்குமுறை, இப்போது சர்வதேச அள வில் பூதாகரமாக வெடித் துள்ளது.

நேற்று முன்தினம் காலை வரை டெல்லி வீதி களில் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த இளைஞர்க ளின் முழக்கம், இன்று உல கின் மிகப்பெரிய சர்வதேச ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக மாறியுள்ளது. ராய்ட்டர்ஸ், அசோசி யேட்டட் பிரஸ், பிபிசி, தி கார்டியன், ப்ளூம்பெர்க், அல் ஜசீரா மற்றும் நியூ யார்க் டைம்ஸ் என உல கின் முன்னணி ஊடகங் கள் அனைத்தும் டெல்லி யின் நிலைமையை உல கிற்கு அம்பலப்படுத்தி யுள்ளன.

டெல்லி போராட்டம்

இந்தியாவில் வாக்கு ரிமை பறிக்கப்படுவதை எதிர்த்தும், SIRல் நடை பெற்ற முறைகேடுகளுக்கு எதிராகவும், பல்வேறு புகார் களுக்கு ஆளான தலை மைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரியும், ‘காக் ரோச் ஜனதா கட்சி’ தலை வர் அபிஜித் திப்கே தலை மையில் இளைஞர்கள் டெல்லி ஜந்தர் மந்தரில் போராடத் திட்ட மிட்ட னர்.

மும்பையிலிருந்து டெல்லி வந்திறங்கிய அபி ஜித் திப்கேவை, விமா னத்தை விட்டு வெளியே கூட வரவிடாமல் விமா னத்திற்குள்ளேயே புகுந்து டெல்லி போலீஸ் கைது செய்தது. அதைத் தொடர்ந்து ஆயிரக்கணக் கான மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசி யல் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டனர்.

அரசு நினைத்தது: ‘தலை வரைக் கைது செய்துவிட் டால் போராட்டம் அடங் கிவிடும்; டெல்லியை மூடிவிட்டால் செய்தி வெளியுலகிற்குத் தெரி யாது.’ ஆனால் நடந்தது என்ன? அடுத்த சில மணி நேரங்களிலேயே இந்த விவகாரம் கடல் கடந்து உலகின் அனைத்து கண் டங்களிலும் எதிரொலிக் கத் தொடங்கியது.

சர்வதேச ஊடகங்கள் டெல்லியில் நடந்த அடக் குமுறையை மிகக் கடுமை யான வார்த்தைகளால் விவரித்துள்ளன:

1.”தலைநகரையே திறந்த வெளி சிறைச்சாலை யாக்கிய அரசு” (ராய்ட்டர்ஸ் & அசோசி யேட்டட் பிரஸ்):

சாமானிய இளைஞர் கள் அமைதியாகக் கேள்வி கேட்பதைத் தடுக்க 23,000 க்கும் மேற்பட்ட துணை ராணுவப் படையினரைக் குவித்தது, பல மெட்ரோ நிலையங்களை மூடியது, இணைய சேவையை முடக்கியது ஜனநாயகத் திற்கு எதிரானது என இந்த ஊடகங்கள் விரிவான செய்திகளை வெளியிட் டுள்ளன.

2. “ஜெனரேஷன் இசட் (GenZ) தலைமுறைக்கு அஞ்சும் ஆட்சி” (பிபிசி & தி கார்டியன்):

இணையதளங்கள் மூல மாகவும் வீதிகளிலும் உரி மைக்காகப் பேசும் இளம் தலைமுறையின் குரலை நசுக்க, ஒரு போர்க்களத் தைப் போல அரசு தயார் நிலையில் நின்றது அதிகா ரத்தின் பயத்தையே காட் டுகிறது என்று பிரிட்டனின் முன்னணி பத்திரிகைகள் சாடியுள்ளன.

3. “சர்வாதிகாரப் போக்கில் உலகின் மிகப்பெரிய ஜனநாய கம்” (அல் ஜசீரா & நியூயார்க் டைம்ஸ்):

அரசியல் சாசனத்தின் படி அமைதியான வழியில் போராட மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால் விமானத்திற்குள் ஏறி போராட்டக் குழுத் தலை வரை இழுத்துச் சென்ற விதம் மற்றும் 3,000க்கும் மேற்பட்டோரை நள்ளிர வில் கைது செய்தது ஒரு சர் வாதிகார ஆட்சியின் நடவ டிக்கையைப் போலவே உள்ளது என்று சுட்டிக் காட்டியுள்ளன.

ஜக்கிய நாடுகள் சபை (UN) வரை எதிரொலித்த கொந்த ளிப்பு

இந்த விவகாரம் சர்வ தேச அரங்கிற்குச் சென்ற தைத் தொடர்ந்து, ஜனநா யக நாட்டில் அமைதியான முறையில் கூடுவதற்கும் போராடுவதற்கும் மக்க ளுக்கு உரிமை உண்டு என் றும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என் றும் ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. இருப்பினும், இது தங்களின் உள்நாட்டு விவகாரம் என்று கூறி மத் திய அரசு அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

உலகிற்கே தெரிந்துவிட்டது!

தேர்தல் ஆணையம் செய்த வாக்காளர் பட்டி யல் குளறுபடிகள் குறித்து இந்திய தொலைக்காட்சி ஊடகங்கள் முழுமையா கப் பேசத் தயங்கிய நிலை யில், அரசின் இந்த அதிரடி அடக்குமுறையே அந்தச் செய்தியை உலக அளவில் கொண்டு சேர்த்துள்ளது.

தலைநகரையும் முடக்கிய செயல்:

அரசின் பலத்தைக் காட் டவில்லை; மாறாக இளை ஞர்களின் குரலைக் கண்டு அரசு எந்தளவுக்கு அஞ்சுகி றது என்பதையே சர்வதேச அளவில் நிரூபித்துள்ளது.

துப்பாக்கிகளாலும், இரும்புத் தடுப்புகளாலும், விமான நிலையக் கைதுக ளாலும் கருத்துச் சுதந்தி ரத்தை அடக்கிவிட முடி யாது என்பதை உலக நாடு கள் இந்தியாவின் தற்போ தைய சூழலை வைத்துப் பேசத் தொடங்கியுள்ளன.

அபிஜித் திப்கே என்ற தனிமனிதரை அரசாங்கம் தடுத்து வைக்க முடிந்தி ருக் கலாம். ஆனால், உலக வரைபடத்தில் இந்தியா வின் ஜனநாயக எதிர்கா லம் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ள இந்த மக்கள் எழுச்சியை எந்த ஒரு அதி கார அமைப்பாலும் தடுத்து நிறுத்த முடிய வில்லை.

மதுரையில் 5 மணி நேரம் மின் வெட்டு.. ஒரு வாரமாக இதே வேலையா போச்சு! மக்கள் ஆதங்கம்!

மதுரை, அக். 12 –

மதுரை அலங்காநல்லூர் அருகே கடந்த ஒரு வாரத்தில் 5 மணி நேரம் மின்வெட்டு ஏற்படு வதை கண்டித்து பொதுமக்கள் நேற் றிரவு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதிலும் சில மாணவர் கள் மின் தடையால் கல்வி பாதிக்கப் படுவதாக கூறி புத்தகங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டது கவ னத்தை ஈர்த்தது.

த.வெ.க. ஆட்சி அமைந்த நாள் முதலே தொடர்ச்சியாக மின் வெட்டு பிரச்சனை அதிகரித்து வருகிறது. முதல்வர் விஜய்யின் சொந்த தொகு தியான பெரம்பூர் தொகுதியிலேயே மின்சாரம் துண்டிக்கப்படுவதாக கூறி பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு ஆளுங்கட்சியும் முறையாக பதில் அளிப்பதில்லை.

மின்துறை அமைச்சர் நிர்மல் குமார், பஞ்சாப் மாநிலத்தில் 14 மணி நேரம் மின் வெட்டு இருப்பதாக கூறுகிறார்.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி யின் போது வராத மின் வெட்டு, த. வெ.க. ஆட்சி அமைந்த உடன் வந் தது ஏன் என்ற கேள்விக்கு முறை யாக பதில் அளிக்கவில்லை. அதே போல் மின்சார கட்டணமும் அறிவிக் கப்படாமல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினை மக்களிடையே கடு மையான எதிர்ப்பை ஆளுங்கட்சி மீது ஏற்படுத்தி இருக்கிறது.

தற்போது சென்னை மட்டுமல் லாமல் பல்வேறு நகரங்களிலும் மின் வெட்டு பிரச்சனை அதிகரித் துள்ளது. மதுரை அருகே அலங்கா நல்லூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக 5 மணி நேரம் வரை மின் வெட்டு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இரவில் 2 முதல் 6 மணி வரை மின் சாரம் துண்டிக்கப்படு வது வழக்க மாகி இருக்கிறது.

இதுதொடர்பாக புகார் அளித்த போது மின் வாரிய அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. மாணவர்கள் பலரும் கல்வி பாதிக்கப்படுவதாக தங்களின் பெற்றோரிடம் கூறி இருக்கின்றனர்.

இந்த நிலையில் நேற்றிரவு அலங்காநல்லூர் மாட்டுத்தாவணி செல்லும் சாலையில் பொதுமக்கள் 50க்கும் அதிகமானோர் சாலை மறி யலில் ஈடுபட்டனர். இதனால் அப்ப குதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சாலை மறியலில் தங்க ளின் பெற்றோருடன் மாணவர்க ளும் புத்தகங்களுடன் ஈடுபட்டனர். இந்த சம்பவம் பலரின் கவனத்தை யும் ஈர்த்துள்ளது.

இந்த விவகாரம் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், பொது மக்களை சமாதானம் செய்தனர். இருப்பினும் மின் வெட்டு பிரச்ச னைக்கு உரிய தீர்வு கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோ.சு. மணி
அக்டோபர் 12 (1962)



சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்

மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.

தலைவர் கலைஞர் அவர்களால் ‘கொள்கை குன்று’ எனப் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.